# காஞ்சி

ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை

மலர் 1 இதழ் 21





# நீதிபதி வக்கீலானால்.....!

மலர் 1 13—12—64 இதழ் 21

டில்லிப் பேரரசில் கல்வித்துறை அமைச்சர் பொறுப்பேற்றுள்ள சக்ளா அவர்கள் புகழ்மிக்க நீதிபதியாகப் பணியாற்றியவர்.

நேர்மைக்கும் அறிவுக் கூர்மைக்கும் எடுத்துக் காட்டு என்று சுட்டிக் காட்டப்படத்தக்க இடத்தில் இருந்து வந்தவர்.

'முந்திரா' விவகாரம் எனப்படுவதுபற்றி ஆய்வு நடத்தி, இன்றைய நிதி அமைச்சராக உள்ள டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், அந்தப் பிரச்சினைபற்றி கூறிய கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கன அல்ல என்று துணிந்து கூறினவர்.

நீதிபதி எனும் முறையில், ஒவ்வொரு பிரச்சினை பற்றியும் காணப்படும் இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட கருத்துகளைச் சீர்தூக்கிப்பார்த்து, உண்மையைக் கண்டறிந்து முடிவு அறிவிக்கும் பொருப்பிலிருந்து வந்தார்; அதனை அனைவரும் மெச்சத்தக்க விதத்தில் நிறைவேற்றி வந்தார்; பெரும் புகழ் ஈட்டினார்.

அத்தகைய நீதிபதி இன்று 'வக்கீல்' வேலை பார்க்க வேண்டி இருக்கிறது; தாமாக வலிய அந்த நிலையினை அவர் பெற்றுக்கொண்டார்.

நீதிபதி, பிரச்சினையின் பல முனைகளையும் கவனித்து எந்த முனையிலும் விருப்பு வெறுப்புகொள்ளாமல், துலாக்கோலாக இருந்தாகவேண்டும்.

வழக்கறிஞர், தாம் பெய்யென ஏற்றுக்கொண்டுள்ள முனைதான் ஒப்புக்கொள்ளப்பட்டாக வேண்டிய உண்மை என்ற அழுத்தமான நம்பிக்கையுடன், அதற்காகத் துணைநின்று வாதாடி, வெற்றிபெற்று, தமது முனையை வழக்கு மன்றத் தலைவர் ஒப்புக் கொள்ளச் செய்திட வேண்டியவர்.

சக்ளா இப்போது வழக்கறிஞராக ஆக்கப்பட்டிருக்கிறார்—இந்தி ஆட்சி மொழி ஆக்கப்பட்டாக வேண்டும் என்ற கட்சிக்கு வழக்கறிஞர்!

கல்வி அமைச்சராக சக்ளா அமருவதற்கு முன்பே, இந்தி மட்டுமே ஆட்சி மொழியாகித் தீரவேண்டும் என்ற திட்டம் புகுத்தப்பட்டுவிட்டது — அதற்கான ஆதரவுப் பேச்சுகளை அள்ளிவிடுவோர் ஒரு புறம் உள்ளனர்.

இந்தி ஆட்சி மொழியாக இருத்சல் கூடாது; அது தீது; ஆகாது; என்றுகூறி, மெய்ப்பித்துவிடுவோர் உளர்-நிறம்ப.

சக்ளா நீதிபதி எனும் நிலையினராகப் பணிபுரிவதால், இந்த இரு தரப்பினரின் வாதங்களையும், விருப்பு வெறுப்பு காட்டாமல்-கொள்ளாமல்-கேட்டு சீர்தூக்கிப் பார்த்து, இந்தி ஆட்சி மொழியாக இருக்கலாம்—அல்லதுஇருக்கக்கூடாதுஎன்று தீர்ப்பளிக்கவேண்டும்.

அதற்கேற்ற உளப்பாங்கும் நேர்மைத் திறனும் அவரிடம் நிரம்ப உண்டு என்பதிலே நம்மைப் போன்றே பலருக்கு ஐயப்பாடு இல்லை—இருக்க முடியாது.

ஆனால் அவர் இன்று, சீர்தூக்கிப் பார்த்துத் தீர்ப்பளிக்கும் நீதிபதி நிலையில் இல்லை — இந்தியை ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்டுள்ள கட்சிக்கு வாதாடும் வழக்கறிஞர் ஆகிவிட்டிருக்கிறார்; ஆகவே அவர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள முனைக்கு ஆதரவான கருத்துகளையே வலியுறுத்த வேண்டி வருகிறது.

ஆனால் அவ்வப்போது அவருக்கு 'நீதிபதியின் உள்ளமும்' எழுந்திருக்கத்தான் செய்கிறது. பிரச்சினையின் மற்ற முனைகளை ஒரே அடியாக மறுப்பதற்கில்லையே என்ற உணர்வும் ஏற்படுகிறது. இதன் காரணமாக இடர்ப்படுகிறார் — இங்கொன்றும் அங்கொன்றும் பேசுகிறார்—இந்த வேளை ஒருவிதமாகவும் வேறோர் வேளை வேறோர் விதமாகவும் பேசுகிறார். நீதிபதி வக்கீலானதால் ஏற்படும், நெளிவும் வளைவும் அவருடைய பேச்சில், போக்கில் மிகுந்து காணப்படுகிறது.

இந்தி ஆதிக்கக்காரர்கள் காட்டிடும் அவசரப் போக்கும் முரட்டுப்பிடிவாதமும் அவருக்கு ஆத்திரத்தைக் கிளப்புகிறது. ஆங்கில எதிர்ப்புணர்ச்சி அவருக்குப் பொறுத்துக்கொள்ளப்பட முடியாததாகத் தெரிகிறது. அதேபோது, அரசியல் சட்டம் இந்தியை ஆட்சி

மொழி என்று அறிவித்துவிட்டிருக்கும்போது அதனை எதிர்க்கக்கூடாதே — எதிர்க்கிறார்களே — என்று எண்ணும்போது, இந்தி எதிர்ப்பாளர்மீது எரிச்சல் எழுகிறது. ஆகவே அவர் இருதலைக்கொள்ளி எறும்பாகித் தவிக்கிறார்.

"ஆங்கிலத்தைப் புறக்கணிப்பதா — அகில உலக மொழியையா — ஆபத்து! ஆபத்து! இந்தி ஆட்சி மொழியாக ஆகிவிட்டாலுங்கூட ஆங்கிலம் நீடித்திருக்க வேண்டும் துணை ஆட்சி மொழியாக" என்று இடித்துரைக்கிறார், இந்தி வெறியர்களின் போக்கைக் காணும்போது.

இந்தியைப் பொதுமொழியாக என்றாவது ஒரு நாள் கொள்ளத்தானே வேண்டும். அதனை எதிர்க்கலாமா! இந்தி நமது நாட்டு மொழி. எத்தனை காலம் அன்னிய மொழியான ஆங்கிலத்தை அரியாசனத்தில் அமர்த்தி வைத்திருப்பது? இது தேசீய அவமானம்!! — என்று கண்டித்துப் பேசுகிறார் இந்தி எதிர்ப்பாளர்களைக் காணும்போது.

சில இடங்களிலும் நேரத்திலும், இவர் இந்தி வெறியர் என்ற எண்ணம் ஏற்படச் செய்துவிடுகிறார்; சிலபோது இவர் ஆங்கிலத்திற்கு ஆதரவாளர் என்ற எண்ணம் எழச் செய்துவிடுகிறார்.

நீதிபதியும் வழக்கறிஞரும் நடாத்தும் போராட்டத்தின் குழறல் நிரம்பிய உள்ளம் கொண்டவராக சக்ளா இருந்து வருவதன் விளைவே அவருடைய பேச்சிலும் போக்கிலும் காணப்படும் விந்தைகளுக்குக் காரணம்.

இந்திதான் ஆட்சிமொழியாக இருந்தாகவேண்டும் — இன்றே — இப்போதே — எத்தனை இடர்ப்பாடுகள் கிளம்பிடினும் — என்று அடித்துப் பேசும் வெறி அவரிடம் இல்லை. அதேபோது, இந்தி ஆட்சி மொழியாக இடமளிக்கக்கூடாது; ஆங்கிலத்தைப் புறக்கணிக்கக் கூடாது; என்று அடித்துப் பேசிடும் துணிவும் அவருக்கு எழவில்லை.

காரணம், அவர் அமர்த்தப்பட்டிருப்பது இந்தி ஆட்சி மொழியாக வேண்டும் என்ற கட்சியின் சார்பில் வாதாட, காரிய மாற்ற; ஆனால் அவருக்கு அமைந்துள்ள நீதிபதியின் உள்ளமோ, அதற்கு அவரை ஒருப்படவிடவில்லை. எனவே சக்ளா அவர்கள், நீதிபதியின் நிலையினை இழந்துவிட்டு, வழக்கறிஞர் நிலையினை மேற்கொண்டு, அதனை நிறைவேற்றுவதற்கான விருப்பம் முழு அளவு பெற முடியாத நிலை பெற்றுத் தத்தளிக்கிறார். அவர் தத்தளிப்பது மட்டுமல்ல, அவருடைய பல்வேறு வகைப்பட்ட பேச்சுகளைக் கேட்போரைத் திகைத்திடச் செய்கிறார்.

தென்னிந்திய மொழிகளில் ஒன்றைப் பயில, வடமாநிலங்கள், குறிப்பாக உத்திரப்பிரதேசம் முன்வரவில்லை; இது நாடு ஏற்றுக்கொண்டுவிட்டுள்ள மும்மொழித் திட்டத்துக்கு முரணாகும்; அதுமட்டுமின்றி 'ஒருமைப்பாடு' எனும் உணர்ச்சிக்கே உலை வைப்பதாகும் என்று சென்ற கிழமை பேசிவிட்டார்.

உத்திரப் பிரதேசமும் அதனை ஒட்டியுள்ள ஒத்த இயல்புள்ள பகுதிகளும், ஒளிவு மறைவு இல்லாமல், துணிச்சலுடன், துரைமார்கள் போக்கில், பேசுகின்றன, இந்திதான் ஆட்சி மொழி — தென்னகம், உரிய இடம் பெற்றுக்கொள்ள விரும்பினால், இந்தியைப் படித்துக் கொள்ளட்டும், இல்லையேல், தோதவர்களாகட்டும் என்பதாக.

வடநாட்டு மொழியைத் தென்னகத்தார் கற்பது போல, நீங்கள், தென்னக மொழிகளில் ஒன்றைக் கற்கவேண்டாமா? கற்பதுதானே! — என்று கூறப்படும்போது, காமராஜர் பாணியில் 'ஆகட்டும் பார்க்கலாம்' என்கின்றனர்.

ஆனால், அவர்கள் தென்னிந்திய மொழியை கற்க முன்வரவில்லை என்பதனை சக்ளா கூறுகிறார். கூறிவிட்டு? கூறுகிறார், அவ்வளவுதான்! அதற்கு மேல் அவரால் ஏதும் செய்ய இயலவில்லை — முடியாது. ஏன்? மும்மொழித் திட்டம், தாய்மொழி, ஆங்கிலம், இந்தி அல்லது வேறு ஏதாவது இந்திய மொழிகளில் ஒன்று பயிலவேண்டும் என்று தெரிவிக்கிறது.

இந்திய மொழிகளில் ஒன்று என்று மும்மொழித் திட்டம் தெரிவிக்கிறது என்ற உடன், இங்கே, தென்னகத்தில் மூன்றாவது மொழியாக இந்தி என்று ஆகிவிட்டது; ஆக்கப்பட்டு விட்டிருக்கிறது.

துணிவு இருந்திருக்குமானால், தமிழக அரசு, இந்தியை நீக்கிவிட்டே, மும்மொழித் திட்டத்தை நிறைவேற்ற முடியும். தாய்மொழியாம் தமிழ் — உலகமொழியாம் ஆங்கிலம் — மூன்றாவது மொழியாக இந்திய மொழிகளிலே ஒன்றான தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்பவைகளில் ஒன்று என்று திட்டமிட்டிருக்கலாம் — மும்மொழித் திட்டத்தின்படி நடந்துகொள்ளவில்லை என்று யாரும் குறைகூற முடியாது.

ஏனெனில், மூன்றாவது மொழியாக இந்திதான் படித்தாக வேண்டும் என்று மும்மொழித் திட்டம் கூறவில்லை.

ஆனால் தென்னகக் காங்கிரசாட்சி 'ஒருமைப்பாடு' என்பதற்காக மூன்றாவது மொழியாக இந்தியைக் கொண்டுவிட்டது.

உத்திரப்பிரதேசம் இதுபோலச் செய்யவில்லை.

மூன்று மொழிகளைத்தானே பயிலவேண்டும்; இதோ கணக்குப் பார்த்துக்கொள்ளுங்கள், மூன்று மொழிகள்

இந்தி
ஆங்கிலம்
சமஸ்கிருதம்
என்று கூறுகிறது.

ஏதாவது ஒரு இந்திய மொழியைத்தானே மூன்ருவது மொழியாகக்கொள்ளவேண்டும் என்று மும்மொழித் திட்டம் கூறுகிறது; சமஸ்கிருதம் இந்திய மொழிகளில் ஒன்றுதானே! நாங்கள் மூன்ருவது மொழியாக சமஸ்கிருதம் படிக்கிரேம் என்று வாதாடுகிருர்கள் உத்திரபிரதேசத்தினர்.

உத்திரபிரதேசத்து முன்னுள் முதலமைச்சர் குப்தா இதுபோல வாதாடியிருப்பதுடன், மும்மொழித் திட்டத்தின்படி உத்திரபிரதேசம் நடந்துகொள்ளவில்லை என்று சக்ளா கூறியிருப்பது கண்டிக்கத்தக்கது என்றும் தெரிவித்திருக்கிருர். அத்துடன் விட்டாரில்லை. சமஸ்கிருதத்தை மூன்ருவது மொழியாக நாங்கள் படிக்கப் போகிரேம் என்பதுபற்றி, பேரரசுக்குத் தெரிவித்து, ஒப்பம் பெற்றும் இருக்கிரேம் என்கிருர் குப்தா!

அவருடைய வாதம் பொறுத்தமானதா அல்லவா என்பதல்ல நமக்கு முக்கியமாகப்படுவது; அவருடைய துணிவு எப்படிப்பட்டதாக இருக்கிறது என்பதுதான், இங்குள்ளவர்கள் கூர்ந்து பார்த்துப் பாடம் பெறத் தக்கது.

தென்னக மொழிகளில் ஒன்றை நாங்கள் கற்றுக் கொள்கிரேம், வடநாட்டு மொழியான இந்தியை நீங்கள் படித்துக்கொள்ளுங்கள் என்று தென்னுட்டவருக்குக் கூறிடும் போக்கு இல்லை. இந்தி ஆட்சிமொழி! ஆட்சி மொழியினல் கிடைத்திடும் எல்லாவிதமான வாய்ப்புகளையும் ஏற்றங்களையும் பெறவேண்டுமானல் இந்தியைப் படித்துக்கொள்ளட்டும் என்று மிரட்டிடும் போக்கிலேதான் உத்திரப்பிரதேசம் இருந்து வருகிறது.

இந்தப் போக்குடன் இருந்து வருபவர்கள், இந்தி மட்டுமே ஆட்சி மொழி என்ருகிவிட்டால், அந்த நிலை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு, உறுதிப்படுத்தப் பட்டுவிட்டால், என்னென்ன வெறிச்செயலையும் போக்கையும் கொள்ளுவார்கள் என்பதனை எண்ணிப் பார்த்திடும் பொறுப்புள்ள எவரும் நடுங்கிடவே செய்வர்.

நிச்சயமாக சக்ளா அவர்கள், இந்தப் போக்கைக் கண்டு வருத்தப்படாமலிருக்க முடியாது ஆனல் வருத்தப்பட்டு? அவர்தான் நீதிபதியின் நிலையில் இல்லையே! வழக்கறிஞராக — அதிலும் தனக்கு முழுத் திருப்திதராத ஒரு முனைக்கு வழக்கறிஞராக ஆகிவிட்டிருக்கிருரே! அவரிடமிருந்து குழப்பங்களையும் முறண்பாடுகளையுந் தவிர, தெளிவையும் துலாக்கோல் போக்கையும் எங்கனம் பெறமுடியும் — எதிர்பார்க்கக் கூட இயலாதே!!

# ஏன் இந்தப் போக்கு?

மன்ருடியார் இனி உணவுத் துறையினை நடாத்திச் சென்றிடப் போவதில்லை; இந்த மாற்றம் கண்டு மருளற்க! காரணம் கேட்டுத் தொல்லைதராது இருந்திடுக; இது நிர்வாக வசதிக்கான ஓர் ஏற்பாடு; கருத்து வேறுபாட்டின் விளைவு என எண்ணிக்கொள்ளற்க; என்று முதலமைச்சர் கூறிவிட்டார்; நாட்டவர் ஏதும் கேட்டிடவில்லை; ஆனல் அவர்கள் பலப்பல எண்ணுகின்றனர்; பேசிக்கொள்கின்றனர்.

மன்ருடியார், பழயகோட்டை பட்டக்காரர்; ஆள் ஆம்பு செல்வம் சீர்நிரம்ப உள்ளவர்; ஆண்டு பலவாக அடக்க ஒடுக்கமான எளியோர்கள் மீது அரசு நடாத்திவந்தவர்; அத்தகையவரை, அது எப்படி? இது எம்முறை? ஏன் இந்தக் குறை? எதற்காக இந்த முறை? என்றெல்லாம், கேட்டிடக் கூச்சமாக உளது; கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வந்து, சொல்லுவன வற்றை அப்படியே ஏற்றுக்கொண்டு. செய்தனபற்றி சேதி கூறிவிட்டுச்சென்றிடும் 'சேவா' இயல்பு கொண்டவராக இவரை எங்ஙனம் நாம் கருதிக்கொள்ள முடியும்! எனவே இவர் இத்துறையில் இருத்தல் வேண்டாம்; நமது விருப்பம் அறிந்து நடந்திடும் வித்தையினை மெத்தத் திறம்பட கற்றுவைத்துள்ள இராமைய்யாவே இதற்குப் பொறுத்தமானவர் என்று காமராஜர் கருதிய தன் விளைவே இந்த மாற்றம் என்கிருர்கள். உலைவாயை மூடலாம், ஊர்வாயை மூடிட முடியுமா!

எத்தனை விளக்கங்கள் தரப்பட்டாலும், மன்ருடியாருக்கு ஏற்பட்ட இந்த 'மாற்றம்' அவருடைய நெருங்கிய நண்பர்கள் மனதுக்கு மட்டுமல்ல, பொது நோக்குடையவர்களுக்கும் ஒருவிதமான கசப்பு உணர்ச்சியை நிச்சயமாக ஏற்படுத்தும்.

மன்ருடியாரிடமிருந்து உணவுத் துறையைப் பெற்றுக்கொண்டார் அமைச்சர் இராமைய்யா எனபது வெறும் நிர்வாக வசதிக்கான மாற்றமாக மட்டும் தெரியவில்லை.

வந்தவர் ஒரு மரியாதைக்காகக்கூட, எனக்கு முன்பு இந்தத் துறையை நடத்திச் சென்றவர், திறமையாகப் பணியாற்றி நிலைமை கேடடையாமல் பார்த்துக் கொண்டார்; நானும் அவர் போலவே அக்கரையுடன் பாடுபட்டு மக்களின் நலனைப் பாதுகாப்பேன் என்று பேசக் காணோம்.

உணவுத் துறை போய்விட்ட பிறது, மன்ருடியார், கூட்டுறவுத் துறை அமைச்சர் என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. உணவுத் துறையை மன்ருடியாரிடமிருந்து பெற்றுக்கொண்ட இராமைய்யா வந்த உடனே இப்போது மன்ருடியாரிடம் ஒப்படைக்கப்

( 13-பக்கம் பார்க்க )

325

# கைதி எண் 6342



## தம்பி!

இந்தியை எப்படியும் அரியணை ஏற்ற இருக்கிறார்கள், நாம் விழிப்புடன் இருந்து தடுத்தாலொழிய, அந்த விபத்து ஏற்பட்டே தீரும் என்று நாம் எடுத்துக்கூறும் போது ஏதோ கட்சி மாச்சரியத்தால் பேசுகிறோம் என்று எண்ணிக்கொள்ளும் மக்கள்கூட, மொரார்ஜியின் பேச்சைக் கேட்ட பிறகு, உண்மை நிலையைத் தெளிவாகப் புரிந்துகொண்டிருப்பார்கள், அந்த வகையில் மொரார்ஜியின் பேச்சு வரவேற்கத்தக்கதுதான் என்று நண்பர்களிடம் கூறினேன்.

**2—4—64**

இன்று தமிழ் நாட்டில் சட்டமன்றத் தொகுதிகளைத் திருத்தி அமைப்பதற்காக துரைத்தனம் மேற்கொண்டுள்ள திட்டத்தை விளக்க, மாவட்ட படங்கள், புள்ளி விவரங்கள் தரும் ஏடுகள், ஒரு பெரிய கட்டு, மதியழகனுக்குத் தரப்பட்டது. இந்திய துரைத்தனத்தார், சென்னை மாநில அரசு மூலம் இதனை அனுப்பியிருந்தனர்—மதியழகன் இதற்காக அமைக்கப்பட்டுள்ள குழுவில் உறுப்பினர். இன்று பெரும்பகுதிப் பேச்சு இந்தப் பிரச்சினையை ஒட்டியதாகவே இருந்தது. மே திங்கள் 11-ம் நாளிலிருந்து இதற்கான குழு உதகையில் கூடுகிறது. இதற்கான அழைப்பிதழும் மதிக்கு அனுப்பப்பட்டது. தமிழக சட்டமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கை உயர்த்தப்பட இருக்கிறது—242 ஆக. எனவே பல புதிய தொகுதிகள் அமைய இருக்கின்றன. மதியும் ராமசாமியும், எந்தெந்த வகையில் புதிய தொகுதிகள் அமையலாம் என்பது பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். மலைவாசிகளுக்காக இப்போது ஏற்காடு தொகுதி இருக்கிறது — மற்றோர் தொகுதி மலைவாசிகளுக்கு அமையலாம்-அது கொல்லி மலையை ஒட்டியதாக, அல்லது ஜவ்வாது மலையை ஒட்டியதாக இருக்கலாம் என்று புள்ளி விவரக் கணக்கைக் கொண்டு மதி கூறினார். ஆங்காங்கு உள்ள நமது கழகத் தோழர்களின் கருத்தையும் அறிந்து இறுதியாக முடிவு மேற்கொள்ளவேண்டும்.

அரசியல் சட்ட எரிப்பு சம்பந்தமான சட்டம் செல்லுபடியாகாது என்பதாக, தொடரப்பட்டிருந்த வழக்கில், நீதிபதிகள் வீராசாமி, குன்னி அகமத்குட்டி ஆகியோர், அளித்த தீர்ப்பு பத்திரிகையில் பார்த்தோம். தீர்ப்பின் வாசகத்தைப் பார்க்கும்போது, மேற்கொண்டு சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்று வழக்காடலாம் என்ற எண்ணம் எழுகிறது. ஆனால், ஏற்கனவே மதுரை முத்துவும் அவர் குழுவினரும் மூன்று திங்களுக்கு மேலாக சிறைப்பட்டிருக்கிறார்கள் — இனியும் அந்த நிலையை நீடிக்கவைக்கக் கூடாது என்று ஓங்கு அனை வரும் கருதினோம்.

அருப்புக்கோட்டையில் நடைபெற இருக்கும் தேர்தல்பற்றி, சுவைதரத்தக்க செய்தி எதுவும் இதழ்களில் காணவில்லை. திருச்செங்கோடு, திருவண்ணாமலை, போடி, நாங்குனேரி, ஆகிய இடங்களிலே தேர்தல்கள் நடந்தபோது காணப்பட்ட பரபரப்பான சூழ்நிலை, என்ன காரணத்தாலோ இப்போது தென்படவில்லை. காமராஜரின் சுற்றுப்பயண நிகழ்ச்சி மட்டுமே குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் சார்பாக நிற்பவர், மறவர்குலத்துப் பிரமுகர் — ராமநாதபுரம் ராஜாவின் இளவல். பார்வார்டு பிளாக், அவருக்கு எதிராக வேலாயுதன்நாயர் என்பவரை நிறுத்திவைத்திருக்கிறது. துணிகரமான முயற்சி என்று நான் கூறினேன். வெற்றிக்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது என்று மதி, காரணம் காட்டிப் பேசிக்கொண்டிருந்தார்.

சினிமா, நாடகத் துறைகளை கேலி பேசிக்கொண்டிருந்த காமராஜர் இப்போது அந்ததுறைகளைத் தன் நட்புக்கரத்தில் கொண்டுவர எடுத்துக்கொள்ளும் முயற்சிபற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். கழகத் தோழர்கள் நல்ல நாடகங்கள் நடத்துவதை அடியோடு நிறுத்திவிட்டது, நமது பிரசார முனையிலே நட்டத்தை உண்டாக்கிவிட்டது என்று நான் விளக்கியபோது, நண்பர் ராமசாமி, எனக்குக்கூட நாடகத்திலே நடிக்க ஆவலாக இருக்கிறது; ஒரு நல்ல நாடகம் எழுதிக் கொடுங்கள், என்று கேட்டுக்கொண்டார், நேரமும் நினைப்பும் துணைபுரியும்போது எழுதிக்கொடுக்கிறேன் என்று தெரிவித்தேன். சுயமரியாதை இயக்க காலமுதற்கொண்டு, நமது இயக்கப் பிரசாரத்துக்கும் நாடகத்துறைக்கும் இருந்துவந்த தொடர்புபற்றிப் பேசிக்கொண்டிருந்தேன்.

சுயமரியாதை இயக்கத்தில் நான் ஈடுபட்டபோது, மாநாடுகளிலே, 'விமலா அல்லது விதவையின் கண்ணீர்' என்ற நாடகம் நடத்தப்பட்டுவந்தது. திருச்சி கீ. ஆ. பெ. விசுவநாதம் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு நாடகக்குழு இது போன்ற நாடகங்களை நடத்திக்கொண்டுவந்தது, பிறகு, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அளித்த இரணியன் அல்லது இணையற்ற வீரன்! என்ற நாடகம், நடத்தப்பட்டது. ஒரு முறை அதிலே இப்போதைய திருவாசக மணி, கே. எம். பாலசுப்பிரமணியமும், குத்தூசி குருசாமியும் நடித்ததுண்டு. இந்த நாடகத்துக்கு நல்ல வரவேற்பு இருப்பது கண்டு, நாடகக்குழுக்களே இதனை நடத்தலாயின. பி. ஜி குப்புசாமி நாயுடு போன்ற நடிகர்கள் இதிலே ஈடுபட்டனர். நமது இயக்கத் தோழர்கள் இங்கும் அங்குமாக, சீர்திருத்த நாடகங்கள் நடத்திக்கொண்டிருந்தனர். நடிகவேள் எம். ஆர். ராதாவின் நாடகம் — சி. பி. சிற்றரசு எழுதியது — முதன்முறையாக, திருச்சி திராவிடர் கழக மாநாட்டிலேதான் நடத்தப்பட்டது; மிகக் குறைந்த செலவில்; அதற்கான பணத்தை வாங்கிக்கொடுக்கவே பெரியாரிடம் மெத்தப் போராடவேண்டி இருந்தது. நண்பர் ஏ. கே. வேலன் ஒரு சில நாடகங்கள் நடத்தினர். சி. பி. சிற்றரசு சில நாடகங்களை நடத்திக்காட்டினர். நாகைத் தோழர் கோபால் ஒரு நாடகக்குழுவே அமைத்து, சில ஆண்டுகள் நடத்திவந்தார். அதிலே கருணாநிதி வேடம் தாங்கினர். கருணாநிதியின் சாந்தா என்ற நாடகம், நல்ல செல்வாக்குடன் இருந்தது. பாவலர் பாலசுந்தரம் ஒரு நாடகக்குழு அமைத்து நடத்தினர். இவ்விதமாக இயக்கப்பிரசாரத்தில் நாடகம் இணைந்து வளர்ந்தது.

டி. கே. எஸ். நாடகக் குழுவிலிருந்து டி. வி. நாராயணசாமியும், எஸ். எஸ். இராஜேந்திரனும் விலகி, சீர்திருத்த நாடகங்களை நடத்தத் தொடங்கினர். நான் எழுதிய சந்திரோதயம் என்ற நாடகம் முதன் முதலில், வடாற்காடு மாவட்ட திருவத்திபுரத்தில் நடைபெற்றது. இரண்டொரு நாடகங்களுக்குப் பிறகு, அதிலே, நடிகர் குழுவைச் சேர்ந்தவர்களும் ஈடுபடலாயினர்.

முன்னேற்றக் கழக துவக்க நாட்களில், கழக கட்டடநிதி, அச்சகநிதி, வழக்குநிதி போன்றவைகளுக்காக கே. ஆர். ராமசாமி எம். எல். சி-யின் ஆர்வமிக்க நாடகங்களின்மூலம் பெருநிதி திரட்டப்பட்டது. சந்திரமோகன்—நீதிதேவன் மயக்கம்—ஆகிய நாடகங்களைத் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் நடத்திவந்தோம். சந்திரமோகன் நாடகத்தில் நடித்தபோதுதான், கணேசன், சிவாஜி என்ற பட்டம் பெற்றது—பெரியார் சூட்டியது.

கருணாநிதியின், தூக்குமேடை—வாழப்பிறந்தவர்கள்—நச்சுக்கோப்பை—போன்ற நாடகங்கள் நாடெங்கும் நல்ல பிரசாரப்பலன் கொடுத்தன. கணேசன் அனேக நாடகங்களில் பங்கேற்றுர், ஒரிருமுறை, M. G. சக்கரபாணியும் அந்த நாடகங்களில் பங்கேற்றிருக்கிறுர்.

நாடகக்குழுக்களுக்கென்றே எழுதிக்கொடுத்த நாடகங்கள் வேறு. நான் இப்போது குறிப்பிட்டிருப்பது, கழகத் தோழர்கள் அதிகமாக ஈடுபட்டு நடித்த நாடகங்களைப்பற்றி.

இவ்விதம் வளர்ந்த நாடகமுனை, கழக நிர்வாக அலுவல் வளரவளர, முடங்கிவிட்டது என்றுதான் சொல்லவேண்டும்

கருணாநிதி எழுதி, பல இடங்களில் நாடகக் குழுவினுல் நடத்தப்பட்டு வந்த உதயசூரியன் என்ற நாடகம், சர்க்காரால் தடை விதிக்கப்பட்டுவிட்டது.

பெரிய நகரங்களிலில்லாவிட்டாலும், சிறிய அளவுள்ள நகரங்களிலும் பெரிய கிராமங்களிலும் பிரச்சார நாடகங்கள் நடத்த, மறுபடியும் கழகம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

இவ்விதம், நண்பர்களிடம் விவரமாகப் பேசினேன் —எல்லோருக்கும் நிரம்ப ஆர்வம் இருக்கிறது. நாடகங்களை நடத்த—நடிக்க—எழுத.

3—4—64

இன்று காலையில் வழக்கறிஞர் நாராயணசாமி என்னைக் காண வந்திருந்தார், நான் எதிர்பார்த்தபடியே சட்ட சம்பந்தமான பிரச்சினையுள்ள வழக்கை, சுப்ரீம் கோர்ட்டுக்குக் கொண்டு செல்வது பலனளிக்கும் என்று கூறினர். இப்போதைக்கு வேண்டாம் — பிறகு ஒரு வாய்ப்பு ஏற்படும்போது பார்த்துக்கொள்ளலாம் என்று கூறி அனுப்பினேன்.

மாலையில் ராணியுடன், அ. க. தங்கவேலரும், என். வி. நடராசனும் வந்திருந்தனர். நகராட்சிமன்றத் தலைவரான பிறகு, முதன் முறையாக அ. க. தங்கவேலரைப் பார்க்கும் வாய்ப்பு. மகிழ்ச்சியாகவே காணப்பட்டார். M. L. C ஆகிவிட்ட, N V. நடராசனிடம் ஒன்றும் மெருகு—முடுக்கு—காணேம்.

காஞ்சிபுரத்தில் அம்மா, அக்கா, கௌதமன், பாபு என் மருமகப்பெண்கள் எல்லோரும் நலமாக இருக்கும் செய்தி, ராணி மூலம் கேட்டு மகிழ்ந்தேன். பரிமளத்துக்குப் பரீட்சை சமயம், அதனுல்தான் வரவில்லை. என்றுர்கள். படிப்பதற்குப் புத்தகங்கள் கொண்டு வருவார்கள் என்று எதிர்பார்த்தேன் — கொண்டுவர வில்லை.

கைவலிக்கு அன்பழகன், கடுகு எண்ணெய் தடவினுல் நல்லது என்று சொல்லி வீட்டிலிருந்து வரவழைத்திருந்தார். அந்த எண்ணெயை இன்றிரவு தடவிக்கொண்டேன்—இரண்டொரு வாரங்கள் தொடர்ந்து தடவினுல்தான் பலன் கிடைக்கும் என்கிருர்கள்.

இன்று பிற்பகல் அன்பழகனிடம் பேசிக்கொண்டிருக்கும்போது, முதல் இந்தி எதிர்ப்புப் போர்க் காலத்தில், மிக்க ஆர்வத்தோடு பங்குகொண்ட மறை. திருநாவுக்கரசு இப்போது முற்றிலும் மாறிவிட்டிருப்பதாகச் சொன்னார். மறைமலை அடிகளாரின் திருமகன் திருநாவுக்கரசு. இன்றைக்கும், மறைமலை அடிகள் எழுதிய, இந்தி பொது மொழியா? என்ற ஏடு, எவரும் மறுக்கொணாததாக இருக்கிறது. ஆனால் மகன், மாறிவிட்டிருக்கிறாராம். எனக்கு மிக நெருக்கமான நண்பர். இப்போது 'மறை' தூத்துக்குடிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார் என்று அறிகிறேன். கருத்திலே காரணத்துடனோ—காரணமற்றோ—மாறுதல் ஏற்பட்டுவிட்டிருப்பினும், என்னிடம் கொண்ட கனிவு மாறி இருக்காது என்று அன்பழகனிடம் கூறினேன்.

பொதுவாக, இந்தி ஆதிக்கத்தின் முழுக்கேட்டினை, மக்கள் நேரிடையாக இன்னும் சந்திக்கவில்லை — அதனால்தான், சிலர் இதனைக் கவனிக்கவேண்டிய அவசியமில்லாத பிரச்சினை என்று கருதுகிறார்கள். வேகமும் பளுவும் நாளாகவாக வளரும் — அப்போது, இப்போது 'ஏனோதானோ'வென்று உள்ளவர்கள்கூட, இந்தி ஆதிக்கத்தின் கேட்டினை உணர்ந்து, துடித்து எழுவார்கள், என்று கூறினேன்.

இன்றும், கம்யூனிஸ்டு கட்சியிலே பிளவு வெகுவாக விரிவாகிவிட்டதற்கான செய்திகள் பத்திரிகைகளில் வெளிவந்திருந்தன—அவைபற்றிப் பேசிக்கொண்டிருந்தோம்.

இரவு, தூக்கம் வருகிறவரையில், பொன்னுவேலிடம், காஷ்மீர் பிரச்சினைபற்றிப் பேசிக்கொண்டிருந்தேன்—(இப்போது என்னுடன் பொன்னுவேல்-வெங்கா-இருவரும் துணை இருக்கிறார்கள்) ஷேக்அப்துல்லாவைப் பத்து ஆண்டுகள் சிறையில் அடைத்து வைத்திருந்ததால் ஏற்பட்ட கெட்ட பெயரும், தொடுத்த வழக்கை நடத்த முடியாமல் திரும்பப் பெற்றுக்கொண்டதால் ஏற்பட்ட ஏளனநிலையும், உள்ளபடி தாங்களாகத் தேடிக்கொண்டவைகள். பிரச்சினை மிகவும் சிக்கலானதாகிவிட்டது, என்பதுபற்றி விவரித்துக்கொண்டிருந்தேன்.

இரண்டு நாட்களாக, தமிழ்ப் பத்திரிகைகளில் வெளிவந்த கதைகளை, சிறைப் படிப்பகத்தார், தொகுத்து வைத்திருக்கிறார்கள்—அவைகளைப் படித்துக்கொண்டிருந்தேன். பெரும்பாலான கதைகள், கவிதைகள்; கருத்து விளக்கம் அதிகம் இல்லை. ஆனால் செல்வவான் வீட்டு, மாநிற மங்கை, மினுக்குத் தைலத்தால் பளபளப்பதுபோல, அழகிய ஓவியங்களால், கதைகள் அழகுபடுத்தப்பட்டிருக்கின்றன. சில கதாசிரியர்கள் வேண்டுமென்றே, 'கழகத்தை' — திருவிழாக்களிலே காளையர்கள் கன்னியர்கள் மீது உரசிவிட்டு மகிழ்வதுபோல — இரண்டொரு இடங்களில், தாக்கியும் இருக்கிறார்கள். வைதீகக் கருத்துகளையும் வேண்டுமென்றே திணித்திருக்கிறார்கள். இத்தகைய கதைகளையும் கட்டுரைகளையும் படித்ததில், சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியினரின் எண்ண ஓட்டம் எந்த விதத்திலே இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

4—4—64

இன்று மறுபடியும் ஊசி போடப்பட்டது. ஆனால் இந்த ஊசிகள் பொதுவாக வலிவு ஊட்டுபவை—எனக்குள்ள கைவலியை நீக்குவதற்கானவை அல்ல.

பத்திரிகையில், ஆச்சாரியார் ஒரு பாராட்டுக் கூட்டத்தில் பேசுகையில், அடுத்து தி. மு. க. அரசு அமையவேண்டும், அப்போதுதான், இந்தி திணிப்பினால், எத்தகைய குமுறல் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தில்லி அரசு உணர முடியும் என்று காரணம் காட்டி இருக்கிறார். பொருத்தமான பேச்சு. இந்தியை எதிர்த்து எத்தனை கிளர்ச்சிகள் நடத்தினாலும், எத்தனை பேர் சிறை புகுந்தாலும், மூடி மறைத்துவிட முடியும்—முடிகிறது — செய்து வருகிறார்கள். ஆனால் இந்தித் திணிப்பைக் கண்டித்து, காங்கிரசைத் தேர்தலில் முறியடித்தார்கள் என்றால் அந்த நிகழ்ச்சியை மூடி மறைக்க முடியாது. ஆகவே, கழகம் இந்தியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்து, சிறை புகுவது மட்டுமல்லாமல், தேர்தல் முனையிலும் வெற்றி ஈட்டியாக வேண்டும், என்பது குறித்து நண்பர்களிடம் பேசிக்கொண்டிருந்தேன். சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் கழகம் பெற்ற வெற்றி, தில்லி வட்டாரத்தில் பரபரப்பை உண்டாக்கிவிட்டிருக்கிறது என்று ஆச்சாரியார் சொன்னதும் முற்றிலும் உண்மையானது. இங்குள்ள காங்கிரஸ் வட்டாரமும் அதற்கு ஆதரவு அளிக்கும் இதழ்களும், கழக வெற்றியை எவ்வளவு மூடி மறைக்கவும், குறைத்து மதிப்படவும் முனைந்தாலும், தில்லியிலும், வேறு இடங்களிலும் கழக வெற்றியை மிக முக்கியமான நிகழ்ச்சியாகத்தான் கருதுவார்கள். அதிலும், தடைச் சட்டம் காரணமாகக் கழகம் அடியோடு ஒழிந்துபோய்விடும் என்று அவர்கள் கணக்குப் போட்டுக் களிப்பில் மூழ்கியிருந்த சமயத்தில் கழகம் இத்தனை வெற்றிபெற்றிருப்பது, மிகமிக முக்யத்துவம் வாய்ந்ததாகும். தி. மு. கழகம், காங்கிரஸ் அரசிடமிருந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தும் நிலைக்கு வளர்ந்துகொண்டு வருகிறது என்பதைத்தான் இது காட்டுகிறது என்பதுபற்றி நண்பர்களிடம் பேசிக்கொண்டிருந்தேன். கழகம் இவ்விதமான வளர்ச்சி பெற்றுக்கொண்டு வருகிறபோது, காங்கிரசை எதிர்ப்பதில் முன்னணியில் நிற்பதாகக் கூறிக்கொள்ளும் பிற கட்சிகளில் எத்தத்தகைய சீர்குலைவுகள் ஏற்பட்டுள்ளன என்பதுபற்றியபேச்சு எழுந்தது.

திருவரங்கத்தில் கூடிய அசோக்மேத்தா குழுவினர் பிரஜா—சோஷியலிஸ்டுகள் காங்கிரசில் சேர்ந்துவிட வேண்டும் என்று முடிவெடுத்த அதேபோது, திருச்சியில் கூடிய சுரேந்திரன் குழுவினர், பிரஜா—சோஷிய

லிஸ்டுகள் காங்கிரசில் சேரக்கூடாது என்று முடிவெடுத்துள்ளனர். இந்தக் கூட்டத்தில் ம. பொ. சிவ ஞானம் கலந்துகொண்டு காங்கிரஸ் போக்கைக் கண்டித்துப் பேசியிருக்கிறார்.

அசோக்மேத்தாவின் போக்குக்குக் காரணம் என்ன என்று நண்பர்கள் கேட்டார்கள். அசோக் மேத்தாவே சொல்லியிருக்கும் காரணம் ஒருபுறம் இருந்தாலும், அவருடைய போக்கு மாறியதற்கான அடிப்படைக் காரணம், காங்கிரசை எதிர்த்து நிற்க எந்தக் கட்சியாலும் முடியாது என்ற தோல்வி மனப்பான்மைதான் — பிரஜா-சோஷியலிஸ்டு கட்சியின் வளர்ச்சியின் வேகம் அவருக்கு நம்பிக்கைத் தரவில்லை, எனவே அவர், காங்கிரசிடம் இணைந்து போய்விடுவது நல்லது என்ற முடிவெடுத்துவிட்டார்; இது ஜனநாயக வளர்ச்சிக்கு நல்லதல்ல, என்று கூறினேன். தமிழகத்தில், இதுபோன்ற தோல்வி மனப்பான்மை காரணமாகப் பல கட்சிகளும், தனிப்பட்டவர்களும், காங்கிரசிடம் அடைக்கலம் புகுந்துவிட்டதுபற்றியும் எடுத்துச் சொன்னேன். இந்த தோல்வி மனப்பான்மையை எதிர்த்து நின்று, மக்களிடம் முறையாக நெறியாகப் பணியாற்றினால் காங்கிரசைத் தேர்தலில் வீழ்த்த முடியும் என்பதை மெய்ப்பித்த பெருமை கழகத்துக்கு உண்டு என்பதைச் சொன்னபோது நண்பர்கள் மெத்த மகிழ்ச்சி அடைந்தார்கள். அடுத்த பொதுத் தேர்தல்பற்றி மிக்க ஆர்வத்தோடு பேசலாயினர்.

காமராஜர், தேர்தல் தந்திரங்களிலே வல்லவர், அவர் முனைந்து நின்றால், வெற்றிதான் கிடைக்கும் என்றிருந்த நிலையையும், கழகம் பொய்யாக்கிவிட்டது என்பதுபற்றி நண்பர்கள் பூரிப்புடன் கூறினார்கள். அது பெருமளவுக்கு உண்மைதான் என்றாலும், காங்கிரசிடம் சிக்கிக்கொண்டுள்ள பணபலத்தையும் பத்திரிகை பலத்தையும் நாம் குறைத்து மதிப்பிடக் கூடாது என்று நான் எடுத்துக்காட்டினேன்.

காஞ்சிபுரம் மறியலில் ஈடுபட்டு பூவிருந்தவல்லி வழக்கு மன்றத்தால், நாலுமாதக் கடுங்காவல் தண்டனை பெற்ற, கே. டி. எஸ். மணி — திருவேங்கிடம்— ராஜி—கிளியப்பன்—ஏகாம்பரம்—ஆகிய ஐவர், இன்று மாலை இங்கு அழைத்துவரப்பட்டார்கள். அவர்களை, நாங்கள் இருக்கும் பகுதியிலேயே இருந்திடச் செய்யலாமா என்று சிறைக்காவலாளி ஒருவர் என்னிடம் வந்து கேட்டார்; அப்படியே செய்யலாம் என்றேன். இப்போது அந்த ஐவரும் எங்களுடன்தான் இருக்கிறார்கள்—11-ம் நம்பர் அறையிலிருந்து வரிசையாக அவர்களுக்கு இடம்.

கே. டி. எஸ். மணியும் திருவேங்கிடமும் காஞ்சிபுரம் நகராட்சி மன்றத் தேர்தலில் வெற்றிபெற்றவர்கள் —சிறையில் இருந்தபடியே.

கே. டி. எஸ் மணி காஞ்சி. கலியாணசுந்தரத்தின் மருமகன். மணியின் திருமணம் என் தலைமையில் நடந்தது. ஆசாமி அப்போது ஒரே கதர்மயம் — காங்கிரஸ்காரர். ஆர்வம் கொந்தளிக்கும் இயல்பு—இலட்சியங்களிலே ஈடுபாடு, ஆனால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மெத்த உடல்நலிவாக இருந்தவர். சிறையில் மிக்க எச்சரிக்கையுடன் இருக்கவேண்டியவர்.

திருவேங்கிடம், தோல் போர்த்துக்கொண்டிருக்கும் எலும்புருவம். உடல்நலம் சென்ற ஆண்டு மோசமாக இருந்தது. இப்போது ஆர்வம் காரணமாக, நல்லபடி காணப்படுகிறார்.

காஞ்சிபுரம் தேர்தல் நிகழ்ச்சிகள்பற்றி மணி பல விஷயங்களைச் சொன்னார்; காங்கிரஸ் கட்சியினரின் முயற்சிகள்; நம்முடைய தோழர்களிலே எவரேனும் சபலத்துக்கு இரையாவார்களா என்று எதிர்பார்த்து அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் ஆகியவை பற்றி விரிவாகக் கூறினார்.

எட்டுப்பேராக இருந்தவர்கள் இப்போது பதின்மூன்று பேராகி இருக்கிறோம்.

வெளியே இருந்து வந்துள்ள அந்த ஐவரிடம், நமது தோழர்கள், பல விஷயங்கள்பற்றிப் பேசி அளவளாவி மகிழ்ச்சி அடைந்தனர்.

7—4—64

இரண்டு நாட்களாகக் குறிப்பு எழுத இயலவில்லை —மண்டைக் குடைச்சல், கழுத்து நரம்புகளில் வலி, மருந்து உட்கொண்டு வருகிறேன். அதனால், குறிப்பு எழுத முடியாது போயிற்று. இன்று வலி பெருமளவு குறைந்துபோய்விட்டது.

மூன்று நாட்களுக்குமாகச் சேர்த்து குறிப்பு எழுதுகிறேன்.

மணி இப்போது கிட்டத்தட்ட 11, பொன்னுவேலுவும் வெங்காவும் தூங்கி அரைமணி நேரத்துக்கு மேலாகிறது, இதுவரையில் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் எழுதியுள்ள 'நினைவு அலைகள்' படித்துக்கொண்டிருந்தேன். முக்கால் பகுதி முடித்துவிட்டேன்.

இன்று காலையில், வழக்கப்படி, சிறை மேலதிகாரிகளின் 'பார்வையிடல்' நடைபெற்றது. நேற்று மாலையே புதிதாக வந்துள்ள ஐவருக்கும் 'கைதி' உடை கொடுத்துவிட்டார்கள், ஆகவே இன்று பதின்மூன்று பேர்கொண்ட எங்கள் அணியை, மேலதிகாரி பார்வையிட்டார்.

கே. பி. சுந்தரம் கண்வலிக்கு மருத்துவம் பெற, எழும்பூர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். காலை 9-மணிக்குச் சென்றவர் 11-மணிக்குள் திரும்பச் சிறைக்குக் கொண்டுவரப்பட்டார்.

இந்த இரண்டு நாட்களாக, மதுரைப் பள்ளிக் கூடம் இடிந்ததால் ஏற்பட்ட பயங்கரமான விபத்து பற்றிய செய்தி, எங்களைத் திகைப்பிலும், துயரத்திலும் ஆழ்த்திற்று. இதுபோன்றதோர் கோரமான நிகழ்ச்சி, நாம் இதுவரை கேள்விப்படாதது என்பதால், எங்கள் மனம் மெத்த வேதனைப்பட்டது. தமது செல்வங்களைப் பறிகொடுத்துவிட்டுக் கதறிடும் குடும்பங்களுக்கு, யார் தான் ஆறுதல் கூறமுடியும்—என்னவென்றுதான் ஆறுதல் கூறுவது. நினைத்தாலே நெஞ்சு பகீர் என்ருகிவிடுகிறது. அன்பழகன் சொன்னுர் "சென்னையிலும், அண்ணு! பல பள்ளிக்கூடக் கட்டடங்கள் கலனுகிக் கிடக்கின்றன. அவைகளை உடனடியாகக் கவனித்து, தக்க முன்னேற்பாடுகள் செய்யவேண்டும்" என்று. ஆமாம்! கட்டடங்களைப் பரிசீலித்து, முறைகளை மேற்கொள்ள ஒரு குழு அமைக்கவேண்டும் என்று நான் கூறினேன்.

இன்றைய பத்திரிகையில், நமது தோழர் வி. முனுசாமி, இவ்விதமான ஒரு குழுவை அமைத்திருக்கும் செய்தி பார்த்தோம்—மகிழ்ச்சிகொண்டோம்.

இங்கே நாங்கள் தங்கியுள்ள சிறைப்பகுதி, புதிது தான் என்ருலும், வெடிப்புகளும், கீறல்களும், பல இடங்களில் உள்ளன. வெகு சமீபத்திலேயே இரயிலின் ஓட்டம். இலேசான அதிர்ச்சிகூட இருப்பதை உணர முடிகிறது. இதைப்பற்றிய எண்ணமும் பேச்சும் இன்று எங்களிடையில் எழுந்தது. பிற்பகலில், கட்டடத்துறை அதிகாரிகளை அழைத்துக்கொண்டு, சிறை மேலதிகாரி இங்குவந்து, வெடிப்புகளையும், கீறல்களையும், காட்டினுர். அவர்களுக்குள் ஏதோ பேசிக்கொண்டார்கள்.

மீண்டும், கே. டி. எஸ். மணியிடம் காஞ்சிபுரத்து கழகநிலை, அரசியல்நிலைபற்றிய விவரங்களைக் கேட்டறிந்துகொண்டேன்.

கே. டி. எஸ். மணிக்குக் காஞ்சிபுரத்தில் உள்ள கம்யூனிஸ்டுகளிடம் நட்பு உண்டு; எனவே, காஞ்சிபுரம் கம்யூஸ்டுகளின் நிலை, இப்போது என்ன? அவர்கள் எந்தப்பக்கம்? மணலி கட்சியா? இராமமூர்த்திகட்சியா? என்றுகேட்டேன். அனைவரும் இராமமூர்த்திக்கட்சிதான் என்று கூறினுர்.

ராமமூர்த்தி கட்சி என்பது காங்கிரசை எதிர்க்கும் அணியாக இருப்பது வரவேற்கத்தக்கதுதான், ஆனுல் அந்த அணி, சீனுக் கட்சி என்று கூறப்படுகிறதே, அது கண்டிக்கத்தக்கதாயிற்றே, இந்தப் பிரச்சினையில் காஞ்சிபுரத்துக் கம்யூனிஸ்டுகளின் நிலைமை என்ன என்று கேட்டேன். அதுபற்றித் தெளிவாகத் தெரியவில்லை என்ருர்.

தனிக் கட்சியே துவக்கிவிடத் திட்டமிடுகிருர்கள், ராமமூர்த்தி அணியினர் என்றும் சொன்னுர்.

பத்திரிகையிலும் அப்படித்தான் செய்தி வருகிறது டில்லியில் ஏ. கே. கோபாலன் போன்ருரும் இதுபோலத் தான் என்னிடம் கூறினுர்கள், ஆனுல் தனிக் கட்சி துவக்கி என்ன பலன்? அதிகமான பலன் இருக்குமென்று எனக்குத் தோன்றவில்லை என்று கூறினேன். பொதுவாக, கம்யூனிஸ்டுகள், தங்களுடைய வளர்ச்சியைவிட, கழகத்தை அழிப்பதையே முக்கிய குறிக்கோளாக, உடனடித் திட்டமாகக் கொண்டுவிட்டிருக்கிருர்கள் என்று மணி கூறினுர்.

அவர்கள் நினைப்பது போலவே ஆகிவிடுகிறது என்றே வைத்துக் கொள்வோம், அதனுல் யாருக்கு ஆதாயம்? காங்கிரசுக்குத்தானே! கழகத்தை ஒழிக்க காங்கிரசுடன் குலவுவது, கம்யூனிஸ்டு கட்சிக்கு என்ன பலன் கொடுக்கும் என்று நான் கேட்டேன். அந்தக் கேள்வி எழும்போது கம்யூனிஸ்டுகள் அதிர்ச்சி அடைகிருர்கள்—பதில் கூறுவதில்லை என்ருர் மணி.

காமராஜரும், பத்திரிகைகளும் ஏன் இப்போது கம்யூனிஸ்டுகளைத் தட்டிக் கொடுக்கிருர்கள் என்று நண்பர்கள் கேட்டனர்.

இது அவருடைய பழய வித்தைதானே! நப்பாசை என்று சொல்லலாம். பெரியார் தி. மு. கழகத்தைத் தாக்கியபோது, காமராஜர் தூபமிட்டார்! இப்போது அதுபோல வேறு சிலருக்கும் ஆதரவு தருகிருர். கண்டபடி ஏசுகிருர்கள். இதனுல் கழகத்திடம் பொதுமக்கள் அருவருப்பு அடைவார்கள் என்பது அவருடைய எண்ணம். இது தொடர்ந்து 10 ஆண்டுகளாக நடக்கிறது—இதிலே ஒவ்வொரு பருவத்துககு ஒவ்வொரு அணி கிடைக்கிறது. முதலில், 'திராவிட எதிர்ப்பு அணி' வேலை செய்தது—பிறகு பெரியாரின் பெரும் படை வேலை செய்தது — இப்போது கம்யூனிஸ்டு கூட்டணி வேலை செய்கிறது. இதிலே உற்சவ மூர்த்திகள் மாறி மாறி வருகிருர்களே தவிர மூலவர் ஒருவர் தான்—ஏமாற்றமும் எரிச்சலும் அடைந்துள்ள காமராஜர்தான். இதுவரையில் எப்படி, இழிமொழிகளையும், பழிச் சொற்களையும், காதில் போட்டுக் கொள்ளாமல், நம்முடைய கடமையைக் கண்ணியமாகச் செய்து கொண்டு வந்தோமோ, அதுபோல் இப்போதும். நாம் நடந்துகொள்ள வேண்டும், என்று நான் கூறினேன்.

கழகத்தின் கட்டுக்கோப்பு பற்றிய பேச்சு கிளம்பிற்று. கழகத்திலே சிலர், இன்னமும் குறை காணும் போக்கினராக, இருப்பது பற்றிக் கூறினுர்கள். நான் சொன்னேன், கழகம் மேலும் வலுவு பெற வேண்டும், முறைகள் மேலும் நேர்த்தியாக வேண்டும் என்ற ஆவல் எழுவதும், அதற்காக ஆர்வத்துடன் முறைகள் பற்றிப் பேசுவதும், நல்லதுதான், ஆனுல், பேச்சோடு நின்றுவிடாமல், கழக வளர்ச்சிக்கு உருப்படியாக அவர்கள் தக்கதைச் செய்தபடி இருக்கவேண்டும்; வெறும் அதிருப்திகளை வெளியிடுபவர்களாக, யோசனைகளை அருளுபவர்களாக இருந்தால், பயன் இல்லை, என்று கூறிவிட்டு, மேலும் சொன்னேன், ஓய்வு ஒழிச்ச

லில்லாமல், தமது சக்திக் கேற்ப, கழகப் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள், அந்தப் பணியினாலேயே களைத்துப்போய்விடுகிறார்கள், சிலரோ தங்கள் சக்திக்கும் தங்களுக்குக் கிடைத்துள்ள வாய்ப்புக்கும் ஏற்ற அளவில் பணிபுரியாது இருக்கிறார்கள்; அவர்களிடம் தேக்கி வைக்கப்பட்டு, செலவிடப்படாமல் இருக்கும் அறிவாற்றல், வெளியே வரவேண்டி இருக்கிறது, அந்த ஆற்றல், குறை காண்பது, முறை கூறுவது என்றவிதமாக வெளிவருகிறது. அவர்களும் தங்கள் ஆற்றலுக்கு ஏற்ற அளவு தங்களைக் கழகப் பணியில் ஈடுபடுத்திக் கொள்வார்களானால், குற்றம் காண நேரமும் இருக்காது நினைப்பும் எழாது என்று சொன்னேன். ஒரு எடுத்துக் காட்டையும் குறிப்பிட்டேன்—மோடாரில் ஆவி தங்கு தடையின்றி வெளியே வந்துவிட்டால், சத்தம் இருப்பதில்லை—ஆவி வெளிவராமல், தடைப்படும்போதுதான், வெடிச் சத்தம் கிளம்புகிறது, அதுபோலத்தான் இது என்று கூறினேன்.

கழகப் பணிகள் இன்னின்னவற்றை இத்தனைச் செம்மையாகச் செய்திருக்கிறேன் என்று மெய்ப்பித்து விட்டு, கழகத்தில், இன்னின்ன முறைகளை இப்படி இப்படித் திருத்தி அமைக்கலாம் என்று கூறும் கழகத் தோழர்களை நான் எப்போதும் பாராட்டி வரவேற்பேன்; கழகத்திலே ஓடியாடி வேலைசெய்யும் சிலநடையமுறைகளிலே குறை காண்பது மட்டுமே வேலையாகக்கொண்டிருப்பவர்களை எப்படிப் பாராட்ட முடியும் என்றும் கேட்டேன். நண்பர்கள் நான் கூறியதை உணர்ந்து கொண்டார்கள் என்றே நம்புகிறேன்.

வால்கா முதல் கங்கை வரை—சிந்து முதல் கங்கை வரை—என்ற இரு புத்தகங்களையும் இங்கு நான் வெங்காவிடமிருந்துதான் பெற்றுப் படித்தேன். இவை, கம்யூனிஸ்டு இயக்கத் தொடர்புள்ள வெளியீடுகள். இவைகளில், ஆரிய முறைகளை, பிராமண ஆதிக்கத்தை, வர்ணாஸ்ரமத்தை ஆசிரியர் ராகுல், மிகக் கடுமையாகக் கண்டித்திருக்கிறார். ஆனால், தமிழகத்துக் கம்யூனிஸ்டுகளின் பேச்சிலோ எழுத்திலோ, இந்தக் கருத்துகளின் சாயல்கூட வெளிப்படுவதில்லை. எனவே, வெங்காவைக் கேட்டேன், இந்தப் புத்தகங்களைக் கம்யூனிஸ்டுகள் நிரம்பப் பேர் படிக்கிறார்களா என்று. ஆம் என்றார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. மதத் துறை பற்றி, பச்சை பச்சையாக, ராகுல் எழுதியிருக்கிறார்—இந்த ஏடுகளைச் சொந்தம் கொண்டாடும் கம்யூனிஸ்டுகள், ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று பேசும், நம்மை நாஸ்திகர்கள் என்று மக்களிடம் 'கோள்' மூட்டுகிறார்களே, இது என்ன விந்தை என்று எண்ணிக்கொண்டேன்.

இரண்டு ஏடுகளிலும் என்ன கூறப்பட்டிருக்கிறது என்று பொன்னுவேல் கேட்டார். கி. மு. 6000 ஆண்டிலிருந்து கி. பி. 1942 வரை, பல கட்டங்களாகப் பிரித்து கதை வடிவில், மக்களின் வாழ்க்கை முறையை ஆராய்ந்து காட்டுகிறார் ஆசிரியர். ஆனால், ஒரு கட்டத்திலிருந்து மற்றொரு கட்டத்துக்கு, மக்களின் வாழ்க்கை முறை, ஏன் மாறிற்று, எப்படி மாறிற்று என்பதற்கான விளக்கம் போதுமானதாக இல்லை. உதாரணமாக, ஒரு புறம் பருத்திக்கொட்டை, அதற்குப் பக்கத்தில் பஞ்சுத்திரி, அதற்குப் பிறகு நூல், அதற்குப் பிறகு துணி, வைத்து ஆடை வரலாறு என்று கூறுவதுபோல இருக்கிறது. நூற்பு எப்படி துவங்கிற்று, நெய்வது எப்படி ஆரம்பமாயிற்று என்று காட்டப்படாதது மாதிரி ஏடு இருக்கிறது. ஆனால் மொத்தத்தில் உனக்கு அந்த ஏடுகள் மெத்தவும் பிடிக்கும் என்று பொன்னுவேலிடம் சொன்னேன். அது என்ன அண்ணா? என்று கேட்டார். இரண்டு புத்தகங்களிலும், பத்து பக்கங்களுக்கு ஒருதடவையாவது விதவிதமான மாமிச விருந்து உண்டது பற்றி கூறப்பட்டிருக்கிறது என்றேன்.

என்னென்ன மாமிசங்கள்? என்று விவரம் கேட்கலானார். காண்டாமிருகத்தின் கல்லீரல் (பச்சையாக) முதற்கொண்டு பசுங்கன்றின் தொடைக்கறி வரையில் கூறப்பட்டிருக்கிறது. முதல் கட்டத்தில் (கி. மு. 6000) ஓநாய்கள் மனிதர்களைக் கடித்து இரத்தத்தைக் குடிப்பதும், மனிதர்கள் ஓநாயை அடித்து அதன் இரத்தத்தைக் குடிப்பதும் எழுதப்பட்டிருக்கிறது என்றேன். பொன்னுவேல், அது கேட்டு அருவருப்பு அடைந்ததாகத் தெரியவில்லை. அந்தக் கல்லீரல் எத்தனை சுவையாக இருக்குமோ, என்ற ஏக்கமே கொண்டுவிட்டார் என்று எண்ணுகிறேன். சிந்து முதல் கங்கை வரை என்ற ஏடு, சிம்ம சேனாதிபதி பற்றியது. இந்தச்சிம்மன், வைசாலிக் குடிஅரசுச் சேனாபதியாகி, மகத மன்னன் பிம்பிசாரனை எதிர்க்கிறான்—பயங்கரமான போர் நடக்கிறது — பல்லாயிரக்கணக்கானவர்களைக் கொன்று குவிக்கிறான்—ஆனால் இதிலே ஒரு அதிசயம்—அவன் போரில் ஈடுபடுகிற நேரத்தில், ஜைனப் பெரியார் ஒருவரிடம் பாடம் கேட்டு, 'அகிம்சை'யை ஏற்றுக்கொண்டு, மாமிச உணவை நீக்கிவிடுகிறான்.

உணவிலே, 'அகிம்சை'—போரிலேயோ, பிணமலை இரத்தவெள்ளம். இது முரண்பாடு அல்ல என்றும் வாதிடுகிறான்.


பொங்கல் மலர்

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு

காஞ்சி பொங்கல் மலர் விலை ரூ. 1—50 ஆகும்.
முன் பணமாக ரூ. 1—50 அனுப்புகின்ற
சந்தாதாரருக்கு மட்டும்தான்
மலர் அனுப்பப்படும்.

இளங்கோவன்.

இதைவிடப் பெரிய அதிசயம்—அதிர்ச்சி தரத்தக்க அதிசயம்—ஜைனப் பெரியாரிடம் பாடம் கேட்டு, மாமிச உணவை நீக்கிவிட்ட சிம்மன், சிலநாள் கழித்து புத்தரைக் காண்கிருன்—அவருடைய புதுநெறியை மேற்கொண்டு, ஜைனத்தை விட்டு விடுகிருன்—அதிர்ச்சி தரும் அதிசயம் அதிலே இல்லை—பௌத்தன் ஆன பிறகு, பழயபடி மாமிச உணவு கொள்கிருன் என்கிருர் ராகுல்! அதிர்ச்சி அதற்கு மேலும் இருக்கிறது; புத்தருக்கும் சீடர்களுக்கும், மாமிச உணவு அளித்து உபசரிக்கிருன் என்றும் எழுதியிருக்கிருர்.

> "மறுநாள் கசாப்புக் கடையிலிருந்து பசு மாமிசத்தையும் பன்றி மாமிசத்தையும் வரவழைத்தேன். உணவு தயாரானதும் நான் புத்த பகவானை அழைத்துவந்தேன். அவர் பிட்சுக்களோடு வந்து உணவருந்திக் கொண்டிருந்தார்."

என்று சிம்மன் கூறுவதாக அந்த ஏட்டில் காணப்படுகிறது.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. எந்த ஜீவனுக்கும் இம்சை செய்தலாகாது என்ற புதுநெறி பரப்பிய புத்தருக்கா, இந்த விருந்து நடந்ததாகச் சொல்வது! எப்படிப் பொருந்தும்!! ஆனல், ராகுல், இந்தத் தமது ஏட்டை ஒரு ஆராய்ச்சி நூல் என்று தெரிவிக்கிருர்.

8—4—64

காருகுறிச்சி நாதசுர வித்தகர் அருணசலம் அவர்களின் திடீர் மறைவு பற்றிய செய்தி பார்த்துத் திடுக்கிட்டுப் போனேன். மிக இளம் வயதிலேயே, மிகப் பெரிய புகழ் ஈட்டிய இந்த இசைவாணனின் மறைவு, தமிழகத்துக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். காலஞ்சென்ற ராஜரத்தினத்தின் நாத இன்பத்தை வழுவாமல், தமிழகத்துக்குத் தந்துவந்த அரும் புலவர், கேட்போரின் நெஞ்சு திடுக்கிடும் வண்ணம் மறைந்தது, பற்றி இங்கு நண்பர்கள் எல்லோரும் வேதனைப்பட்டனர். நாற்பத்து மூன்று வயது! இதற்குள், என்ன புலமை! எத்துணை இனிமை! எவ்வளவு நேர்த்தியான கற்பனைத் திறமையைக் காட்டிவிட்டார் காருகுறிச்சி. அறுபது ஆண்டுகள் வாழ்ந்து அளிக்கவேண்டிய நாதஇன்பத்தை நாற்பதாம் ஆண்டுக்குள்ளாகவே வழங்கினர். தமிழகத்துக்கு நேரிட்டுவிட்ட இந்தப் பெரிய இழப்பை எண்ணி எண்ணிக் குமுறிக்கொண்டிருந்தோம். காருகுறிச்சி அருணசலம் அவர்கள் எனக்குக்கிடைத்த ஒரு நேர்த்தியான நண்பர். களங்கமற்ற முகம்—கனிவான பார்வை—பரிவு ததும்பும் பேச்சு. என் மகன்களின் திருமணத்திற்கு வந்திருந்து நாதஇசை விருந்து அளித்து பல்லாயிரக்கணக்கான மக்களை மகிழ்வித்ததை எண்ணிக் கொண்டேன். அவர், காஞ்சீபுரம் வந்து போகும் செலவுத்தொகை கூடத் தரவில்லை. எவ்வளவு பரிவுடன் வந்து, இசை விருந்தளித்தார்! அதனை எல்லாம் எண்ணி எண்ணி மெத்த வருத்தப்பட்டேன். இன்று, படிப்பதிலேகூட நாட்டம் செல்லவில்லை. மீண்டும் மீண்டும் நண்பர்களுடன், மறைந்தவரின் மாண்புகள் பற்றியே பேசிக்கொண்டிருந்தேன். நாதஸ்வரம், தமிழகத்தின் தனிப் பெரும் செல்வம். இந்தியாவின் இதர பகுதிகளிலே இந்தச் செல்வம் இல்லை. இதிலே நேர்த்தியான தேர்ச்சி பெற ஓயாத உழைப்பு தேவை. காருகுறிச்சி, தமது ஆவியையே சிறிது சிறிதாகக் கரைத்து நாதமாக்கித் தந்துவந்தார் என்றே கூறவேண்டும். புலமை வளர வளர, அவருடைய அடக்கமும் பரிவு காட்டும் உணர்ச்சியும் வளர்ந்து வந்தது. இப்படிப்பட்ட வித்தகரை தமிழர்கள் இழந்தது பெரியதோர் இழப்பு. கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், தியாகராஜ பாகவதர், திருவாவடுதுறை ராஜரத்தினம்,—எனும் கலைச் செல்வர்களை இழந்தது போதாது என்று இப்போது காருகுறிச்சியையும் தமிழகம் இழந்து தத்தளிக்கிறது. தமிழகத்துக்குத்தான் எத்தனை எத்தனை இழப்புகள்—தொடர்ந்து — அடுக்கடுக்காக — என்பது பற்றியெல்லாம் எண்ணி எண்ணி ஏக்கமுற்றுக் கிடந்தோம்.

9—4—64

இன்று பிற்பகல், காஞ்சிபுரம் மறியலில் கலந்துகொண்டு இங்கு சிறைப்பட்டிருக்கும், மதுராந்தகம் தோழர் என்னைக் காண வந்திருந்தார். இளைஞர். கிராமத்திலுள்ளவர். சில விநாடிகள் ஏதுமே பேசாமல் என் எதிரே நின்றுகொண்டிருந்தார் — ஆனல் கண்களில் நீர்துளிர்த்தபடி இருக்கக் கண்டேன். என்ன தம்பி? என்று கேட்டேன் — அண்ணா! என்னுடைய இரண்டு குழந்தைகள் இறந்துவிட்டனவாம் — என்று கூறினர் — திகைத்துப் போய்விட்டேன் — ஒரு குழந்தைக்கு மூன்று வயதாம்—மற்றென்று கைக்குழந்தையாம். தமிழகம் இந்தி மொழி ஆதிக்கத்தால் தாழ்நிலை அடையக்கூடாது என்பதற்காக அறப்போரில் ஈடுபட்டு இந்த இளைஞர் இங்கே சிறைப்பட்டுக் கிடக்கிருர் — அவர் பெற்றெடுத்த செல்வங்கள் இறந்துவிட்ட செய்தியைப் பெறுகிருர். என்னென்பது இந்த வேதனையை;

## விற்பனையாளர்களுக்கு

மணியார்டர், செக், டிராப்ட், கடிதங்கள் அனுப்பும்போது உரிமையாளர் "காஞ்சி" அலுவலகம் சின்ன காஞ்சிபுரம் என்று குறிப்பிட்டு எழுதவும்.

உரிமையாளர்
"காஞ்சி"
சின்ன காஞ்சிபுரம்.

என்ன ஆறுதல் கூறுவது! அந்த இளைஞனின் மனம் என்னென்ன எண்ணுகிறதோ! குழந்தைகளை இழந்த அந்தத் தாயின் மனம் என்ன பாடுபடுகிறதோ. இங்கே தமிழ் காத்திடத் தவமிருக்கிறான் வீரன், அவன் பெற்றெடுத்த முத்துக்கள் பறிக்கப்பட்டுப் போய்விட்டன. எத்தனை இன்னல்களைத் தாங்கிக்கொள்கிறார்கள், தமிழ் காத்திடும் வீரர்கள், தமிழகம், இதனை உணருகிறதா! காணோமே! எனினும் கடமையைச் செய்தாகவேண்டும் எத்தனை கஷ்ட நஷ்டம் ஏற்படினும் கலங்கலாகாது என்ற உள்ள உரத்துடன் இந்த இளைஞர் போன்றோர், அறப்போரில் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் தியாகம் வீண்போகும் என்று நான் நினைக்கவில்லை. பகட்டான விளம்பரம் கிடைக்காதிருக்கலாம், பாராட்டும் பண்பு கூட மிகக் குறைவாகவே எழலாம், அமைச்சர்கள் அலட்சியப் பேச்சுக்கூடப் பேசிடலாம், அற்பர்கள் எள்ளி நகையாடலாம் ஆனால், இந்த இளைஞர்போன்றோரின் தியாகம் தமிழக வரலாற்றிலே தனி இடம் பெறப் போவது உறுதி. என்னாலான மட்டும் அந்த இளைஞனுக்கு ஆறுதல் கூறி அனுப்பினேன், அந்த இளைஞனுக்கு வந்துற்ற இழப்பை எண்ணி நண்பர்களெல்லாம் வேதனைப்பட்டனர்.

10—4—64

இரவு மணி ஒன்று அடித்துவிட்டது, இனித்தான் தூங்கச் செல்லவேண்டும், குறிப்பை எழுதிவிட்டு; இதுவரை, மிக உருக்கமான ஒரு வரலாற்று நிகழ்ச்சியை — நாடக வடிவில் எழுதப்பட்டது — படித்துக் கொண்டிருந்தேன்.

இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து நாம் நடத்தும் அறப்போர் காரணமாக, நமது தோழர்களுக்கு ஏற்பட்டுவிட்ட இழப்புகள் இன்னல்கள் ஆகியவை மனதை மருட்டுவதாக இருப்பதுபற்றிக் குறிப்பிட்டேன். இன்றிரவு நான் படித்த அந்த வரலாற்று நிகழ்ச்சி, நம்மை தாக்கியுள்ள இழப்புகளையும் இன்னல்களையும் ஒரு பொருட்டாகக்கூட எண்ணக்கூடாது என்ற எண்ணத்தைத் தந்தது.

> "கருணை காட்டுவதற்கு இல்லை. உன் கணவன் தூக்கிலிடப்படுவது உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. உடலை உன்னிடம் தர உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது."

இவ்விதமான தந்தி கிடைக்கிறது, கவர்னரிடமிருந்து, ஒரு மூதாட்டிக்கு; மூன்று பிள்ளைகள் கொல்லப்பட்டுப் போயினர், கணவன் தூக்குத் தண்டனை பெறுகிறான்! மற்றோர் மகன் ராணுவப் போலீசால் வேட்டையாடப்பட்டு வருகிறான்; மகளுடைய காதலன் உடல் முழுதும் குண்டுகளால் துளைக்கப்பட்டு இறந்துபோனான்! மருமகள் குழந்தை பெற்றெடுத்திருக்கிறாள், விதவை ஆக்கப்பட்டுவிட்டிருக்கிறாள்.

இது. அந்த வரலாற்று நிகழ்ச்சியின் இறுதிக் கட்டம் — புகழ்மிக்க தூக்குமரம் என்பது தலைப்பு— அமெரிக்கநாட்டு நிகழ்ச்சி.

நீக்ரோக்களை அடிமைகளாகக் கொடுமைப்படுத்திக் கொண்டிருந்த நாட்களில், ஏசுவிடம் விசுவாசமும் நாட்டுப்பற்றும்கொண்ட ப்ரவுன் எனும் பெரியவர்— நாலுபிள்ளைகள் இரண்டு பெண்களுக்குத் தகப்பன்— தப்பி ஓடிவரும் நீக்ரோக்களைக் காப்பாற்றி, இரகசியமாக அவர்களை கனடா நாட்டுக்கு அனுப்பிவைக்கும் தொண்டு செய்துவருகிறார், குடும்பம் முழு ஒத்துழைப்பு தருகிறது. இதனால், நீக்ரோக்களை அடிமைகளாக்கிக் கொண்டு கொக்கரிக்கும் தென்பகுதி, ப்ரவுன்மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ளத் துடிக்கிறது,

பிரச்சினை, மனிதத்தன்மைக்கு மாறானது, கடவுள் நெறிக்கு முரணானது என்ற அழுத்தமான நம்பிக்கை அத்தப் பெரியவருக்கு. எப்படியும் அடிமைத்தனத்தை ஒழித்தாகவேண்டும் என்று துடிக்கிறார். அந்தத் தூய தொண்டிலே தன்னையே வதைத்துக்கொள்ளவும் தயாராகிறார்.

22-பேர்களைக்கொண்ட ஒரு படை அமைக்கிறார்— அதிலே மூவர் அவர்பிள்ளைகள்—ஒருவன் மகளுக்கு மணாளனாக விரும்பும் இளைஞன்.

இந்தப்படை, வர்ஜீனியா மாநிலத்திலுள்ள, பாசறையைக் கைப்பற்றி, ஆயுதங்களை எடுத்து, அடிமைகளிடம் கொடுத்து, புரட்சி மூட்டுவது, அடிமைகளுக்கு விடுதலை கிடைக்கும்வரையில் அந்தப் புரட்சி நடத்துவது என்பது திட்டம். திட்டம் என்று கூறுவதற்குத் துளியும் பொறுத்தமற்ற ஒரு ஏற்பாடு—ஒரு எழுச்சி—ஒரு துடிப்பு — தற்கொலை முயற்சி என்றே கூறலாம். இந்த முயற்சி முறியடிக்கப்பட்டாலும் நட்டமில்லை, ஏனெனில் அமெரிக்காவும் உலகும் துடித்தெழுந்து பிரச்சினையைப்பற்றித் தீவிரமாகச்சிந்திக்கும் அந்தச் சிந்தனையிலிருந்து ஒரு எழுச்சி பிறக்கும், விடுதலைக்கு வழிகிடைக்கும் என்கிறார் ப்ரவுன்? பாசறையைத் தாக்குகிறார்கள் — படைகள் சூழ்ந்துகொள்கின்றன — பலர் கொல்லப்படுகிறார்கள். ப்ரவுன் தூக்குத் தண்டனை பெறுகிறார். இது வரலாற்று நிகழ்ச்சி—அடிமை விடுதலைக்கான சட்டத்தை ஆபிரகாம் லிங்கன் பிறப்பிப்பதற்கு முன்பு நடைபெற்றது— 1859ல்.

அண்ணன்,

அண்ணாதுரை

4-ம் பக்கத் தொடர்ச்சி

பட்டுள்ள கூட்டுறவுத் துறை மகா மோசமாக இருக்கிறது! எவ்வளவோ சர்க்கார் உதவி பெற்றும், கூட்டுறவு அமைப்புகள் திறமையாகப் பணியாற்றவில்லை; இதைப் பார்க்கும்போது, கூட்டுறவுத் துறை அமைப்புகளைவிட, தனியார் துறை அமைப்புகள் எவ்வளவோ மேல் என்று சொல்லத் தோன்றுகிறது என்று சாடியிருக்கிறார்.

கூட்டுறவுத் துறையின் சீர்கேடுபற்றி அமைச்சர் இராமைய்யா கூறியுள்ள கருத்துகளை ஆராய இதனை எழுதவில்லை.

ஆனால், மன்றாடியாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள—அவரிடம் இருந்து வருகிற--கூட்டுறவுத் துறை மோசமாகி வருகிறது என்று அமைச்சர் இராமய்யா பேசுவது கேட்கும் பொதுமக்கள் என்ன எண்ணுவார்கள்--என்ன எண்ணிடத் தோன்றும் ?

உணவுத் துறையைத்தான் செம்மையாக நடத்திச் செல்ல முடியவில்லை என்பதற்காக மன்றாடியாரிடமிருந்துஅந்தத் துறையை எடுத்துவிட்டனர் இராமய்யாவிடம் தந்துவிட்டனர். கூட்டுறவுத் துறையைக் கூட மன்றாடியார் திறமையாக நடத்திச் செல்ல முடியவில்லை போலிருக்கிறதே; அந்தத் துறை மிக மோசமாக இருக்கிறதாமே; அமைச்சர் இராமய்யாவே கூறுகிறாரே; மன்றாடியார் இவ்வளவு திறமைக் குறைவாகவா இருக்கிறார் என்றெல்லாம் எண்ணிக்கொள்ள மாட்டார்களா?

ஒரு அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள துறை மிக மோசமாக இருப்பதாக, மற்றோர் அமைச்சர் வெளிப்படையாகப் பேசுவது. அரசியல் பண்புதானா?

ஏன் அமைச்சர் இராமய்யா இவ்விதம், தம்மைப் போலொத்த ஒரு அமைச்சரைப்பற்றி மக்கள் மதிப்புக் குறைவாக எண்ணிக்கொள்ளத்தக்கவிதமாகப் பேசுகிறார்? என்ன நிலையில்? என்ன அதிகாரத்தில்? புரியவில்லை!

இதனைவிட வியப்பு, ஏன் மன்றாடியார், இப்படி குட்டுப் பட்டுக்கொண்டு இருக்கிறார் என்பது.

எல்லாவற்றையும்விட வியப்பாக இருக்கிறது, முதலமைச்சர் பக்தவத்சலம், பொறுத்தமான விளக்கம் அளிக்காமல், துறைகளைமாற்றியிருப்பதும், அமைச்சர் ராமய்யாவின் கண்டனம், மறைமுகமாக மன்றாடியாரை மட்டந்தட்டுகிற முறையில் இருக்கிறது என்பது தெரிந்தும் அதனை அனுமதித்துக்கொண்டு இருப்பதும்.


# காஞ்சி
# பொங்கல் மலர்

**காஞ்சி**
பொங்கல் மலர், சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டு வருகிறது.

**காஞ்சி**
பொங்கல் மலர், வண்ணமும் மணமும்மிக்க எண்ணக் குவியல் என்று எவரும் கூறத்தக்கதாக மிளிரும்.

**காஞ்சி**
பொங்கல் மலரில், அண்ணா, 7 சிறு கதைகளும், 2 கவிதை நடைக் கருத்தோவியங்களும், கட்டுரைகள், தம்பிக்கு மடல் ஆகியவற்றுடன் தருகிறார்.

**காஞ்சி**
பொங்கல் மலரின் முகப்புப் படம் ஓவிய வல்லுநர் மாதவன் அவர்கள் தீட்டியளித்துள்ளார்.

**காஞ்சி**
பொங்கல் மலரில் கதைகளுக்கு ஓவியர் இளைஞர் தாமரை, எடுப்பான ஓவியங்கள் தீட்டித்தந்திருக்கிறார்.

**காஞ்சி**
பொங்கல் மலருக்கான காகிதம் முன்னதாக எந்த அளவு தேவைப்படும் என்பதனை அறிந்தே பெற வேண்டி இருக்கிறது.

ஆகவே,

**காஞ்சி**
பொங்கல் மலர் எத்தனை தேவை என்பது குறித்து உடனே தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறோம்.

முன் பணம் அனுப்புக.

விலை 1—50

# கண்டதுண்டா?

# இப்படிப் பேசிடும் செப்படி வித்தைக்காரரை!

மோசம், மோசம், மகாமோசம்! நாசம், நாசம் பொருள் நாசம்! நாற்றம், நாற்றம், எங்கும் நாற்றம்!

ஒரு அமைப்பை நடத்திச் செல்லும் பொறுப்பிலே உள்ளவர், இது போல, தமது அலுவலகத்தைப் பற்றிப் பேசிடக் கேட்டதுண்டா? அத்தகைய விந்தை மனிதரைப் பார்த்ததுண்டா?

நான் பொறுப்பேற்பதற்கு முன்பு, மோசமான நிலை, பொருள் நாசமாகிக் கொண்டு வந்தது, ஊழல் நாற்றமடித்துக் கொண்டிருந்தது, மிகக் கவனமாகப் பணியாற்றி நிலைமையைச் செப்பனிட்டிருக்கிறேன், என்று கூறுபவர்களைப் பார்த்திருப்பீர்கள். அதற்காக முயற்சி எடுத்துக்கொண்டு வருபவர்களைக் கண்டிருப்பீர்கள். ஆனால் மோசமாக இருக்கிறது—நானும் இருக்கிறேன்! என்று கூறிடும் துணிவு மிக்கவரைக் கண்டிருக்க முடியாது ஆனால் அப்படி ஒருவர் இருக்கிறார்!!

> நூற்றுக்கு எழுபது அளவுக்கு வரி கொடுக்காமல் ஏய்க்கப்பட்டு வருகிறது!

சொல்கிறார்! கூச்சமற்று, அச்சமற்று!

தாத்தக்கவர்களிடம் வரியினைத் திரட்டிட வேண்டிய பொறுப்பிலே உள்ளவர், பொருளாதார நிபுணர் என்ற புகழாரம் பெற்றவர், கண்டிப்பானவர் என்று சுட்டிக் காட்டப்படுபவர், இந்தியாவின் நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், தமது பொறுப்பிலே உள்ள துறையிலே இத்தனை மோசம் இருக்கிறது என்பது பற்றித் துளியும் கூச்சப்படாமல வரி ஏய்க்கப்படுவதை அறிந்திருந்தும், அதனால் பொது மக்களின் நலன் நாசமாக்கப்படுவதனை உணர்ந்திருந்தும், அதனைத் தடுத்திட, ஏய்ப்பவர்களைப் பிடித்திட ஏன் முயற்சி எடுத்து வெற்றி காணவில்லை என்று மக்கள் கேட்பார்களே என்ற அச்சமின்றி, எங்கோ வெளிநாட்டிலிருந்து இங்கு வந்திருந்து நிலைமைகளைக் கண்டறிந்து கூறிடுபவர் போல, 100-க்கு 70-என்ற அளவில் வரி ஏய்க்கப்படுகிறது என்கிறாரே, விந்தை மட்டும் அல்ல, விபரீதம் அல்லவா இந்தப் போக்கு.

எந்த ஒரு அமைச்சரும், தமது துறையிலே, தோல்வி காண்பாரானால், அதற்காக வெட்கப்பட்டு, தமது பதவியை விட்டு விலகி, ஜனநாயக மரபு காத்திடுவார்; காண்கின்றோம் பிற நாடுகளில்.

சூயஸ் கால்வாய் பிரச்சினையில், பாராட்டத்தக்க விதமாகச் செயல்பட்டு வெற்றி பெறாமற்போன காரணத்துக்காக, இங்கிலாந்து நாட்டில் அந்தனி ஈடன் பதவியை விட்டு விலகினார்.

100-க்கு 70 எனும் அளவில் வரி ஏய்க்கப்பட்டு வருகிறது என்பதனை, டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், நிதி அமைச்சராக இருந்துகொண்டே கூறுகிறார்!!

வரி ஏய்க்கப்படுகிறது என்றால், எந்த வரி? எந்த வகையினர் வரி கொடுக்காமல் ஏய்த்திட முடியும்? ஏழைகளா? முடியாதே! அவர்களை இழுத்து வெளியே விட்டு விட்டு, தட்டு முட்டுச் சாமான்களை எடுத்து ஏலத்தில் விட்டு, பணத்தை வசூலித்துக் கொள்ளும் வல்லமை அதிகாரிகளுக்கு உண்டு — நிரம்ப! பார்க்கிறோம். நிலவரி, நீர்வரி, தொழில் வரி, விற்பனை வரி, போன்றவைகளைச் செலுத்தாமல் ஏழைகளும் நடுத்தர குடும்பத்தினரும், தப்பித்துக்கொள்ள முடியாது. போலீஸ் துறை எதற்குத்தான் இருக்கிறது என்று எண்ணிக் கொள்கிறீர்கள், இதைக் கூடச் செய்யாமல்!

வரி ஏய்ப்பவர்கள் சாதாரண மக்களல்ல—மாளிகை வாசிகள், வணிகக் கோமான்கள்—உயரப்பர்!!

வருமான வரி, சுங்க வரி ஆகியவற்றினை ஏய்த்திடும் பேர்வழிகள், சுகவாசிகள் — அவர்களால்தான் 100-க்கு 70 அளவுக்கு வரி ஏய்க்கப்படுகிறது.

அவர்களை அணுக, அடக்க, அவர்கள் நடத்தும் ஏய்ப்பினைத் தடுக்க, சட்டம் கொண்டு அவர்களைத் தாக்க, அவர்தம் சூது சூழ்ச்சியினைத் தகர்க்க, ஏன் இவரால் முடியவில்லை! முடியாத நிலையினர் ஏன முடிதாங்கியாக இருக்கவேண்டும்! புரியவில்லை!!

எப்படி முடிகிறது இந்த அளவுக்கு வரியை ஏய்த்திட என்பது தெரியாமல் திகைக்கிறாரோ, நிதி அமைச்சர்? இல்லையே! அது குறித்தும் அவரே அப்பட்டமாக உண்மையைச் சொல்கிறாரே. கேளுங்கள் அவர் தெளிவாகக் கூறியிருப்பதை;

> தவறு செய்பவர்கள் அதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்டுள்ளனர்.

விளக்கமாகத்தானே எடுத்துரைக்கிறார்! இருந்தும் ஏன் இதனைத் தடுத்திட, இந்தக் கூட்டினை உடைத்திட முடியவில்லை. கணக்கேடுகளைக் கைப்பற்ற முடியாதா? முடியும்! ஆனால், அதைப் பார்க்கும்போது, என்னென்ன விவரங்கள் வெளியாகின்றன என்பது, சிராஜுதீன் நிகழ்ச்சி மூலம் தெரிகிறதே! என்ன செய்வது? என்ற அச்சமோ?

முகப்பில்......

சென்னை மாநகராட்சி மன்ற
துணை மேலர்
**தோழர் அபிபுல்லாபேக்**
எம். பி. பி. எஸ்.,

வேலியே பயிரை மேய்கிறது என்ற உண்மை ஊருக்கு விளங்கிவிடுமே என்ற திகிலோ? விளங்கவில்லை! தவறு செய்பவர்கள் — அதாவது வரி கொடுக்காமல் ஏய்ப்பவர்கள்— அதிகாரிகளைக் கைக்குள் போட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதனை நிதி அமைச்சர் சொல்லும்போது, அந்தக் கருத்து, தமக்கு மட்டும் ஏற்பட்டதல்ல என்பதனையும் விளக்க,

பொதுமக்களுடைய கருத்தைத்தான் நான் நிச்சயமாக எடுத்துரைக்கிறேன்.

என்று அடித்துப் பேசுகிறார்—தன் எதிரில், இந்தக் கேடு களைய வக்கற்று நிதி அமைச்சர் ஒருவர் நிற்பதைக் கண்டு வெகுண்டவர் போல!

நீண்ட காலமாகவே இருந்து வருகிறது இந்தக் கேடு.

போர்க் காலத்திலேயே இருந்தது.

ஆனால் இப்போது அதிகமாகி விட்டிருக்கிறது.

கள்ளக் கடத்தல் ஏராளமாக நடக்கிறது.

வைரம் கடத்தப்பட்டு வருகிறது,

என்றெல்லாம், நிதிஅமைச்சர் பட்டியலே படிக்கிறார்.

வரி வசூலிப்புத் துறை அதிகாரிகளின் கூட்டத்திலேயே, நிதி அமைச்சர் இதுபோலப் பேசியிருக்கிறார். பேசிவிட்டு,

“கள்ளக்கடத்தல் செய்பவர்கள் யாரார் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் உங்களால் அவர்களைத் தொடக்கூட முடியவில்லை!

என்றும் இடித்துரைத்திருக்கிறார்.

தென்னகத்திலுள்ள ஆலை முதலாளிகள் —வடக்கே உள்ளவர்களைப் பற்றி எனக்குத் தெரியாது —தாங்கள் விற்கிற ஒவ்வொரு பேல் நூலுக்கும், கள்ளத்தனமாக கணக்கில் சேர்க்காமல் 400 - ரூபாய் வாங்குகிறார்கள். தெரியும், அந்தத் தொகைக்கு எனக்கு வருமான வரிகூடக் கிடைப்பதில்லை.

என்று, நகைச்சுவை கலந்து பேசியுள்ளார்.

வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி வரியைக் கொட்டிக் கொடுக்கும் ஏழை, நடுத்தர குடும்பத்தார், இவ்விதமாக நிதி அமைச்சர் பேசக் கேட்டால், என்னென்ன எண்ணிக் கொள்வார்கள், எவ்வளவு வேதனைப் படுவார்கள்.

எங்களைக் கசக்கிப் பிழிய முடிகிறது, கனவானிடம் போக கால் நடுக்க மெடுக்கிறதா!

மாடாக உழைத்து ஓடாகிப் போகிறோம், எம்மிடம் சுரண்ட மனம் இடம் தருகிறது, சுயநலச் சுரண்டல்காரர்களின் சூதுக் கோட்டையைக் கண்டதும், கிலி பிறக்கிறதா!

இதுதானா, நீங்கள் பேசிடும் சமதர்மம்! ஓநாயிடம் நடுக்கம், ஓட்டாண்டிகளிடம் முடுக்கு'! என்றெலலாம் கேட்கமாட்டார்களா? கேட்பதுடன், இப்படி, வரியை பெரிய முதலாளிகள் அதிகாரிகளைக் கையில் போட்டுக்கொண்டு ஏய்த்து வருவதை அடக்கிட இயலாதவர்களுக்கு ஆட்சியில என்ன வேலை என்று கூறி, தேர்தலிலே தீர்ப்பளித்து, அத்தகைய ஆட்சியைத் தீர்த்துக்கட்டிவிட மாட்டார்களா? என்றெல்லாம எண்ணம் எழாதா நிதி அமைச்சருக்கு; மற்றக் காங்கிரஸ் தலைவர்களுக்கு. நிச்சயம் எழும்! எழுந்தும் அச்சம் வராத காரணம்? இந்த மக்கள், துடிப்பார்கள் பதைப்பார்கள், ஆனால் இவர்களைத் தேர்தல் காலத்தில் தந்திரமாக ஏமாற்றிவிடலாம் என்ற தைரியம் இருக்கிறது ஆளவந்தார்களுக்கு. மக்களின் சீற்றம் நம்மைத் தாக்கிடும், பதவியை விட்டு விரட்டப்பட்டு விடுவோம் என்ற அச்சம் எழவில்லை. அந்த அச்சம் ஆளவந்தார்களுக்கு எழாத வரையில், மோசம், நாசம், ஊழல் நாற்றம் எல்லாம் இருக்கத்தான் செய்யும்.

○

நக்கீரர் கழகம்

**திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி**
**சென்னை**

(துவக்கம் 1944)

திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி கோடை விடுமுறைக்குப் பிறகு 1964 ஜூன் திங்கள் 12-ஆம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 6-15 - மணிக்கு வழக்கம்போல் வகுப்புகள் தொடங்கப் பெற்றன.

வித்துவான் புகுநிலை, வித்துவான் முதனிலை, வித்துவான் நிறைநிலை வகுப்புகள் தொடர்ந்து நடைபெறும். இவ்வாண்டு எம். ஏ. தமிழ் வகுப்பு தொடங்கப்பெற்றது சுமார் 18 தமிழ் ஆசிரியர்கள் அன்புப் பணி ஆற்ற ஆர்வமுடன் இசைந்துள்ளனர்.

1964 மார்ச்சு திங்களில் நடைபெற்ற பல்கலைக் கழகம் புகுநிலை முதனிலை, நிறைநிலைத் தேர்வுகளுக்குச் சென்று வெற்றிபெற்ற மாணவர்களில் முதல்தர மாணவர்களாக எமது கல்லூரியில் தேறியவர்களுக்குப் பேராசிரியர் கா. நமச்சிவாயர் நினைவுப பதக்கங்கள் வழங்கப்பெறும்.

இவ்வாண்டு (1964—மார்ச்சுத் திங்களில்) தேர்வுக்குச் சென்ற எல்லா வகுப்பு மாணவர்களும் தேர்ந்து உள்ளனர் என்று மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

இடம்: ஏ. ஆர். சி. மகளிர் உயர் பள்ளி, 44. பவழக்காரத் தெரு, மண்ணடி, சென்னை–1.

# ஒடுங்கி நின்றேன்

"த"

ஏட்டைப் பிரித்து என்முன் வைத்து
பாட்டைப் படித்தேன்; பொருளும் புரிந்தது;
விளக்கம் சொல்ல விரும்பித் தொடர்ந்தேன்
கலக்கம் மனதில் கப்பிக் கொண்டது.
சொல்வ தறியாது சோர்ந்து நின்றேன்,
சொல்லை உணராச் சோர்வு அல்ல,
சொல்லத் தெரியா தொல்லை அல்ல,
கல்லாத புதிய கவிதையும் அல்ல.
பழைய பாட்டு பாடம் சொன்னது
பாட்டில் மனது பதிய வில்லை;
என்றும் இப்படி இருந்த தில்லை.
இன்று ஏனோ இதுபோல் ஆனது!
"ஏந்திழை ஒருத்தி எறும்பின் அளையில்
தோண்டிய அரிசி வேண்டிய மட்டில்!"
என்று பாட்டு எடுத்தியம் பியது
நன்று என்று நாமும் புகழ்வோம்.
இன்று நிலைமை என்ன என்பதை
நன்று அறிவோர் குன்றிப் போவர்.
ஏந்திழை ஏங்கிழை ஆகி விட்டாள்!
எறும்புக்கு ஏது அரிசி இப்போது?
சோரார் புறங்காண சேர்ந்து நிற்கும்
போரார் மறவர்போல், ஓர்ந்து நிற்கும்
வரிசை உண்டிங்கு, வரிசை உண்டு
வரிசை வரிசையாய் வரிசை உண்டு.
வரிசை உண்டு, அரிசி இல்லை;
வரிசை கெட்ட அரசு உண்டு.
பரிசு பெற்ற புலவன் பாட்டில்
அரிசி உண்டு, அறிந்து கொள்வோம்!
கியூவில் நின்ற கிளியாள் ஒருத்தி,
விழியில் அரிசி விழுந்திடும் முன்னர்
குழந்தை இழந்தாள்; கொடுமை! கொடுமை!!
குழந்தை கொன்ற அரசு கொடுமை!
கோட்டைக் குள்ளே கொலுவில் இருக்கும்
நாட்டை மறந்த நமது மந்திரி
தானும் அறியார் தக்கார் பேச்சு
தனையும் கேளார்! காப்பார் கடவுளே!
சங்க காலச் சங்கதி, பாட்டில்;
சங்கடக் காலச் சங்கதி நாட்டில்!
ஏதும் அறியாப் பிள்ளைகள் முன்னர்
ஓதிட வாயின்றி ஒடுங்கி நின்றேன்!

... "காஞ்சி" அச்சகத்தில், (உரிமையாளர்) ... இளஞ்சேரலும்